செய்தி வெளியீடு எண் : 043 நாள்: 07.01.2022

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு உதவிட 24/7 அலைபேசி வழி உதவி சேவை மையம் அமைத்தல்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்கள், கோவிட் பெருந்தொற்று இரவு நேர ஊரடங்கின் காரணமாக தொழில்களுக்கும், தொழிலாளர்களுக்கும், எந்தவிதமான இடர்பாடும் ஏற்படக் கூடாது என உத்திரவிட்டுள்ளார்கள். தமிழ்நாட்டில் தொழில்களுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்கும் வண்ணம், உற்பத்தி தொழிற்சாலைகள் உட்பட அனைத்து தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் சார்ந்த நிறுவனங்கள் இரவு ஊரடங்கு காலத்திலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் தொடர்ந்து செயல்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஏதுவாக, 24/7 அலைபேசி வழி உதவி சேவை மையம் ஒன்றை தொடங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்திரவிட்டுள்ளார்கள்.

அதன் அடிப்படையில், தமிழ்நாடு அரசின் தொழிற்துறை உதவி சேவை மையம் உடனடியாக செயல்பாட்டிற்கு வரும். எனவே, உற்பத்தித் தொழில், சரக்குப் போக்குவரத்து, விநியோகம், கட்டுமானம் ஆகியவற்றில் ஈடுபடும் தொழில்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்ந்து பணியாற்றிட தங்களுக்குத் தேவையான உதவிகளை பெற்றிடவும், சந்தேகங்களுக்கு தெளிவு பெற்றிடவும், கீழ்கண்ட அலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம்:–

| மாவட்டங்கள் | அலுவலர் | தொடர்பு கொள்ள வேண்டிய எண் |
|---|---|---|
| சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம் , திருவண்ணாமலை | பிரசாந்த் | 7823928264 |
| | ராஜேஷ் | 9629122906 |
| | உத்தமச்சோழன் | 9962993495 |
| சேலம், திருப்பூர், ஈரோடு, கோயம்புத்தூர், மதுரை, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, அரியலூர், நீலகிரி, கரூர், நாமக்கல், பெரம்பலூர், தேனி, நாகப்பட்டினம், மயிலாடுதுறை | ராஜவேல் | 7823928263 |
| | ராகவ் | 7823928262 |

| | | |
|---|---|---|
| கிருஷ்ணகிரி, தர்மபுரி, ராணிபேட்டை, வேலூர், கடலூர், கள்ளக்குறிச்சி | தர்மேஷ் | 9840084662 |
| கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, விருதுநகர், ராமாநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருப்பத்தூர், திருவாரூர் | சுரேஷ் | 9787426831 |
| | மகேஷ் | 7824001216 |

மேலும், இது தொடர்பாக covidsupport@investtn.inஎன்ற மின்–அஞ்சல் முகவரியையும் தொடர்பு கொள்ளலாம்.

இதே போன்று, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தங்களுக்கு தேவையான உதவிகளைப் பெற்றிடவும், சந்தேகங்களுக்கு தெளிவு பெறவும் 9150093678 என்ற அலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம். (இந்த அலைபேசி எண் 9.1.2022 அன்று முதல் செயல்பாட்டிற்கு வரும்). மேலும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் support@tnmtipb.in என்ற மின் அஞ்சல் முகவரியையும் தொடர்பு கொள்ளலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**